Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |
|---|---|

| வேணு : 18 | பிப்ரவரி 2013 | கானம் : 7 |
|---|---|---|










Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar.

**Related Websites : www.namadwaar.org** **Email:contact@namadwaar.org**

ஸ்ரீ ஹரி

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை




| வேணு : 18 | பிப்ரவரி 2013 | கானம் : 7 |
|---|---|---|

Delivered by India Post www.indiapost.gov.in



ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் சதாபிஷேகத்தை முன்னிட்டு எண்பது ஸ்ரீமத் பாகவத புத்தகங்களால்
ஸ்ரீ ப்ரேமிக வரதனுக்கு அர்ச்சனை செய்யும் காட்சி – ஜனவரி 17, 2013






ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் ப்ரும்மஸ்ரீ ஏகாம்பர சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய ப்ரும்மஸ்ரீ முல்லைவாசல் டாக்டர் க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், ப்ரும்மஸ்ரீ சுந்தரேச சர்மா ஆகியோர் கௌரவிக்கப்படுதல்; "மஹாபெரியவாளும் ஏகாம்பரமாகிய நானும்" - முதல் பிரதியை பெறுபவர் நீதியரசர் ஸ்ரீ அருணாசலம் –ஜனவரி 13, 2013– நாரதகான சபா




ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்கள் - ஸ்ரீப்ரதீப் ஜானகிராமன் மற்றும் சத்சங்கத்தினர் ஜனவரி 12, 2013

மதுரபுரீ ஆஸ்ரம கன்யாகுமரி ஜய ஹனுமான் சன்னதி - ஹனுமத் ஜெயந்தி - ஜனவரி 11, 2013





குடியாத்தம் அருகே ஏரிக்குத்தியில் ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் ஆலய கும்பாபிஷேகம் — ஜனவரி 23, 2013



மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை
சென்னை காமராஜர் அரங்கம் – ஜனவரி 5, 2013





ஸ்ரீரங்கம் மேலூர் – ஸ்ரீசஞ்ஜீவன ஆஞ்சநேயர் ஆலயம்- சஹஸ்ர கோடி
ராம நாம பிரதிஷ்டை – ரங்க வீதிகளில் நகரகீர்த்தனம் டிசம்பர் 30, 2012



பாகவத மேளா Vysya Hostel and Choultry பெங்களூரு – ஜனவரி 25

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 18 பிப்ரவரி 2013 கானம்: 7

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

இந்த இதழில் ...


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 203 | 3 | பாகவதம் யாரிடம் கேட்கலாம்? | 25 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 09 | ஆலய தரிசனம் | 30 |
| | | பாலகர்களுக்கு ஒரு கதை | 32 |
| பாகவத பழம் - 35 | 12 | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 38 |
| அனுபவம் 1 - மாயை | 15 | மாலே மணிவண்ணா | 40 |
| ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் | 18 | அப்பாலுக்கு அப்பால் | 42 |


கருடன் உருவம் கருது மளவிற்
பருவிடம் தீர்ந்து பயம் கெடுமாப் போல்
குருவின் உருவம் குறித்த அப்போதே
திரிமலம் தீர்ந்து சிவனவனாமே -- **திருமந்திரம்**

பாம்பு கடித்து உடலில் விஷம் ஏறிய ஒருவன், சிரமப்பட்டு ஹிருதயத்தில் கருடனை தியானம் செய்தால், விஷம் அப்போதே இறங்கி விடும்; அவன் ஆரோக்யத்தை அடைந்து விடுகின்றான். அதுபோலவே, குருவின் உருவத்தை தியானிப்பவனின் ஹிருதயத்தில் உள்ள விஷயம் என்ற விஷம் போய் விடும்.

# ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் : மத்யாமாவதி ஆதி தாளம்

பல்லவி

கதை கேளு கதை கேளு
ஸதா ஹரிகதையை நீ கேளு
(கதை கேளு..)

அனுபல்லவி

பக்தி விரக்தியுடன் கதை சொல்பவரிடம்
ஸ்ரத்தா பக்தியுடன் கதை கேளு
(கதை கேளு..)

சரணங்கள்

1. தர்மாவதாரமான ராமனின் கதையையும்
லீலாவதாரமான க்ருஷ்ணனின் கதையையும்
ஹரியின் அனந்த அவதார கதைகளையும்
ஹரிதாஸர்களின் கதைகளை நீ கேளு
2. கதையில் கேட்டதை கருத்தினில் கொண்டு
மனதில் நினைத்து கீர்த்தனம் பாடு
ஞான பக்தி விரக்தி வளர்ந்து
துரீய நிலையை துரிதத்தில் அடைந்திட
3. அட்டாங்க யோகத்தின் உத்தம பலனையும்
தட்டாமல் நீயும் அடைந்திடவே
கஷ்டம் விலகி இஷ்டம் கை கூட
காலத்தை நஷ்டமாக்காமல் கதை கேளு
4. கவலையை போக்கி அமைதி நல்கிடும்
அவலநிலை போக்கி ஆனந்தம் அளித்திடும்
துவளும் மனதை துள்ளிட செய்திடும்
பவள வாயன் இவன் கதை கேளு
5. விஷ்ணு ராதன் போல கதை கேளு
விஷ்ணு ப்ருதுவை போல கதை கேளு
விஷ்ணு தாஸன் ஹனுமன் போல் கதை கேளு
விஷ்ணு முரளீதரன் கதை கேளு

# மதுரமான
# மஹனீயர் - 203

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

சிவகாசி நாம அன்பர்களிடம், பவானி அக்கா என்று கேட்டால், தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். தூத்துக்குடி அன்பர் திரு.கதிரேசனின் உறவினர் இவர். இவரது கணவர் திரு.கார்த்திகேயனுக்கு, சிவகாசியில் அட்டைப்பெட்டிகள் செய்யும் தொழில். வாழ்க்கையில் கஷ்டங்களை சந்தித்த இவர், கடவுளின் அருள் வேண்டி பாத யாத்திரையாக, அறுபடைவீடு தலங்களுக்கும் சென்று வந்தார். சிவகாசி யோகிராம்சுரத்குமார் பஜனை மண்டலியில் இணைந்து, பல இடங்களுக்கும் சென்று பஜனை செய்துகொண்டிருந்தார்.

சத்சங்கத்தில் இருந்தால், கடவுளின் கருணை நம்மீது பட்டே தீருமல்லவா? அப்படித்தான் ஆழ்வார்திருநகரியில் ஒரு குழுவுடன் சேர்ந்து குருநாதரை தரிசிக்கும் பேறு, பவானி அக்காவிற்கு கிடைத்தது. பார்த்த அன்றே குருநாதரிடம் தன் கவலைகளை சொல்ல, பவானி அக்கா நினைத்தாலும், அவருக்கு பேச நா எழவே இல்லை. அன்று, குருநாதர் ஒன்றும் பேசாமல் பிரசாதம் தந்து அருளினார்கள். அன்றிலிருந்து, ஆங்காங்கு சென்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை தரிசனம் செய்வது, பவானி அக்காவிற்கு வழக்கமாகிவிட்டது.

திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் அவர்களிடமும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடமும் மிகுந்த பிரியமும், ஈடுபாடும் கொண்ட ராஜ்திலக் பிரிண்டர்சின் மேனேஜிங் டைரக்டர் திரு.குமாரவேல் சிவகாசியை சேர்ந்தவர். அவரது இல்லத்தில் ஒருமுறை ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பாகவத சப்தாஹம், ஏற்பாடு ஆகி இருந்தது. தினமும் காலையில் பாராயணமும், மாலையில் அருகிலிருந்த கிராமங்களில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையும் ஏற்பாடாகி இருந்தது. ஒவ்வோர் கிராமத்திலும், வரும் அன்பர்களிடம் குருநாதர் அவர்களது நலத்தை உத்தேசித்து

"நாமம் சொல்லுங்கள்" என்று சொல்லுவார்கள். பல மேற்கோள்களை காட்டி நாமத்தின் பெருமையை எடுத்துப் பேசுவார்கள். அப்பொழுது குருநாதர் தம் மேல்வஸ்திரத்தை விரித்து "நாம பிக்ஷை" தாருங்கள் என்று அந்த கிராமங்களில் கேட்டார்கள். நாமம் சொல்வது எவ்வளவு முக்கியம் என்றும், அதை மக்களின் நன்மைக்காக மக்கள் சொல்வதற்காக, குருநாதர் எவ்வளவு பாடுபடுகிறார் என்பதும், அன்பர்கள் மேல் குருநாதரின் கருணையும் அதை பார்த்தவர்களுக்கு நன்கு புரிந்திருக்கும்.

அதை பார்த்த பவானி அக்காவும் "எவ்வளவு பெரிய மஹான் கருணை உள்ளமுடன் இப்படி நாம பிச்சை கேட்கிறார். அவரே இப்படி செய்கிறார் என்றால் நாம் எப்படி இருக்க வேண்டும். நாமும் நாமகீர்த்தனத்தை பற்றி மக்களுக்கு எடுத்துச் சொன்னால் என்ன" என்று நினைத்தார். குருநாதரிடம் தன் விருப்பத்தை தெரிவிக்க, திருத்தங்கல் கோவிலில் நாமகீர்த்தனம் துவங்க குருநாதர் அனுமதி தந்தார்கள்.

பவானி அக்காவிற்கு இருந்த கஷ்டங்கள் எல்லாம் குருநாதர் அருளால் விலகின. அதை பற்றி பவானி அக்கா பேசினாலே, குருநாதர் "நீ நாமம் சொன்னதால் இறைவன் அருள் கிட்டியது" என்று கூறி விடுவார்கள். பவானி அக்காவின் உள்ளமோ "சிறு காரியம் செய்தவர்கள் கூட தங்களை பற்றி சொல்லி கொள்ள ஆசைப்படுவார்கள். ஆனால், குருநாதர் கஷ்டம் விலக அருளுவதோடல்லாமல், அது பற்றி தனக்கு சம்பந்தமில்லை என்றல்லவா காட்டி கொள்கிறார்கள்" என்று வியப்படைவார்.

குருநாதர் அன்பர்களுடன் அன்பர்களாக கலந்து பழகுவார். குடும்பத்தில் ஒருவர் போல எல்லோரும் கஷ்டங்களை பகிர்ந்து கொள்வர். கருணையுடன் கேட்டு கொண்டு யதார்த்தமாகவும் குருநாதர் பேசுவார். அப்பொழுது எல்லாம், அடடா! நம் குடும்பத்தை சேர்ந்த ஒருவர் பேசுவது போல்தான் இருக்கும். தனக்கு இருந்த கஷ்டங்களை பற்றி பவானி அக்கா சொல்கையில் எல்லாம் "அத்தகைய கஷ்டங்கள் எல்லாம் வரங்கள். அவை அன்பர்களை நல்வழிப்படுத்த

உதவுகின்றன" என்று சொல்வார். குருநாதர் கேட்டு புன்முறுவலித்து கொள்வார்.

பவானி அக்கா "எனக்கு குருநாதரின் தரிசனத்திலிருந்து சிரமங்கள் சிரமங்களாகவே இருப்பதில்லை. எனக்கு நாமமும் குருநாதரும்தான் தெரியும். என்னை நான் குருநாதரிடம் ஒப்பு கொடுத்து விட்டது போல, என் குடும்பத்தையும் கொடுத்து விட்டேன்" என்பார். பவானி அக்காவை பொறுத்தவரை குருநாதர் ஒரு தாய் போல. ஆஸ்ரமமும் நாமத்வாரும் தாய் வீடு போல.

அவர் கணவருக்கு வீடு வாங்க ஒரு எண்ணம் வந்தது. இரண்டு மூன்று வீடுகள் பார்த்தனர். குருநாதரிடம் விவரம் தெரிவித்தனர். லோன் போட, பவானி அக்காவிற்கு இஷ்டமில்லை. விலை அதிகமாக இருந்தாலும் நாமத்வாருக்கு அருகில் இருந்த வீட்டைத்தான், குருநாதர் வாங்க சொன்னார். வீடு காலி ஆயிற்றா என்று கேட்டுக்கொண்டே குருநாதர் இருந்தார்கள். வீட்டை விற்றவர்கள் கடைசி பொருளை எடுத்துக் கொண்டு காலி செய்கையிலேயே, குருநாதர் தானாகவே வந்து, தன் காலடிகளை வீட்டுக்குள் எடுத்து வைத்து விட்டார்கள். அது மட்டும் இல்லை. பத்திரம், பேப்பர் என்று எல்லாம் சரியாக முடிந்ததா? என்று விசாரித்தவாறே இருந்தார்கள். பசுவிற்கு கன்றிடம் என்ன வாத்சல்யமோ, அப்படி அன்பர்களிடம் குருநாதருக்கு இருக்கும். அன்பர்கள் பற்றிய கவலை எல்லாம் குருநாதர் படுவார்.

இதோ! லோன் எதுவும் இல்லாமல், வீடு வாங்கி கடந்த ஜனவரி 18 அன்று பால் காய்ச்சியும் ஆகி விட்டது. அப்படித்தான் பவானி அக்கா கணவர் தனது கம்பெனியில் புதிதாக ஒரு கட்டிடத்தையும் குருநாதர் அருளால் கட்டினார். குருநாதர் அருள் ஒருவரது தேவை அனைத்தையும் பூர்த்தி செய்து விடும்!

பள்ளி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, எல்லோரிடமும் சிவகாசி அன்பர்கள் எல்லோரும் சிரத்தையாக ஒருநாள் கூட நாமத்தின் பெருமை குறித்து பேசாமல் இருக்க

மாட்டார்கள். பல கோவில்களில் நகரசங்கீர்த்தனம் செய்வர். கேட்கவே சந்தோஷமாக இருக்கிறது என்பார் குருநாதர். இது சிவகாசி அன்பர்களுக்கு மேலும் உற்சாகத்தை தந்து விடும். நாமம் சொல்பவர், நாமம் சொல்ல வைப்பவர், ஒத்துழைப்பவர், இடம் தருபவர் என எல்லோருக்கும் நாமகீர்த்தனம் பலன்களை வாரி தருமல்லவா? நாமகீர்த்தனத்தில் கலந்து கொண்டோருக்கு குருநாதர் அருளால் அபரிமித பலன் கிடைத்து அன்பர் கூட்டம் பெருகி, சேவை மனப்பான்மையுடன் கூடிய ஒரு அழகிய நாம அன்பர்கள் குழுவும் தயாரானது. ஒருமுறை சிவகாசியில் ஐம்பது அன்பர்கள், பத்து பத்து நபராய் தினம் ஏழு கிராமங்களென, 5 நாட்களில் 35 கிராமங்களுக்கு சென்று நாம பிரசாரம் செய்தனர். அதை கேள்விப்பட்ட குருநாதர் "இப்படி கிராமங்களில் செய்த நாமகோஷம் ப்ரேமிகவரதனை சந்தோஷப்படுத்தி இருக்கிறது. அவன் மார்பிளிலேயே வந்து எழுந்தருள போகிறான்" என்றார்கள். இன்று அது நிஜமாகி விட்டது.

சிவகாசியில் அன்பர் சத்சங்கம் பெரிதானவுடன், குருநாதர் சிவகாசியில் நாமத்வார் அமைய நல்ல இடம் பார்க்குமாறு சொன்னார்கள். நான்கு இடம் பார்த்து விட்டு குருநாதரிடம் அன்பர்கள் சொல்ல, குருநாதர் கண்களை மூடிக்கொண்டு "முதலில் பார்த்த இடத்தில் நாமத்வார் நன்கு அமையும்" என்று அருளினார்கள். மார்ச் 7, 2008இல் பி.கே.எஸ் தெருவில் நாமத்வார் துவங்கியது. முதல்வருட பூர்த்தியில், பூர்ணிமாஜியின் ராமாயண நவாஹமும் குருநாதர் முன்னிலையில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையும் இடம்பெற்றது. குருநாதர் தரிசனம் பெற வந்த கூட்டம் தாளாமல், அலைமோதி தடுப்புக்காக போட்ட கம்புகள் உடைந்து போனது. சிக்கலாகி விட்டதே என்று கவலைப்படுகையில் குருநாதர் ஒரே ஒருமுறை நாமம் சொன்னாராம். யாரையும் வரிசைப்படுத்த வேண்டிய தேவையே இல்லாமல், கூட்டம் அப்படியே கட்டுக்கோப்பாக அடங்கி போனதாம்!

சின்ன இடமான நாமத்வாருக்கு நூற்றுக்கும் மேல் தினம் வந்தவாறு இருந்தனர். காலை 6மணி முதல் மாலை 6மணி வரை

அகண்டமாக நாமம் நடக்கும். "நாமத்வார் சின்ன இடமாக இருக்கிறது; பெரிய இடம் அமைய வேண்டும்" என்று குருநாதர் அபிப்ராயப்பட்டார்கள். சொந்த இடத்திற்கு பெருந்தொகை கேட்கிறார்கள் என்றபொழுது அவர், "நாமா சொல்லிக்கொண்டே இருங்கள்; இடம் நான் தருகிறேன் என்று ஒருவர் தேடி வருவார்" என்று சொன்னார்கள். அதுவும் அப்படியே மெய் ஆனது.

திரு.குமாரவேல் அவர்களின் சித்தி டாக்டர் பவுன்கிரேஸ் அவர்கள் தனது இடத்தை தர முன் வந்தார். அந்த இடத்தை அன்பர்களே சுத்தப்படுத்தினார்கள். குருநாதரும் நேரில் வந்து பார்த்து ஒப்புதல் தந்தார்கள். அன்பர்கள் கூடி வீடு வீடாக சென்று, நிதி திரட்டி பலர் இந்த கைங்கரியத்தில் பங்கு கொள்ள அழகான நாமத்வார் அமைந்தது. அதில் மாதுரி சகி சமேத ஸ்ரீப்ரேமிக வரதன் மார்பிளில் எழுந்தருளி உள்ளார்கள்.

குருநாதர் "நாமா சொன்னால் உன் முன்னால் பகவான் தேடி வருவான்" என்று சொன்னதற்கேற்றாற்போல் பகவான் வந்து சேர்ந்தான். இப்பொழுது தினமும் 400அன்பர்கள் வந்து, நாமகீர்த்தனம் செய்கின்றனர்.

சிவகாசி நாம அன்பர்களிடம் பவானி அக்கா வீடு வீடாக சென்று நாம பிக்ஷை கேட்பார். குறைந்தது 60வீடுகள் தினமும் இருக்கும். குருநாதர் அந்த குறிப்புகளை எல்லாம் அவ்வப்பொழுது பார்வையிடுவார்கள். "உனக்கு ஏதாவது கஷ்டங்கள் வருகிறதா. எப்படிப்பட்ட இடங்களில் செய்கிறாய்" என்று அக்கறையுடன் விசாரிப்பார்கள்.

அவ்வப்பொழுது குருநாதர் திரு.குமாரவேலுவிற்கு தபால் எழுதுவதும் உண்டு. அவற்றில் எல்லாம் "பல கஷ்டங்களுக்கு நடுவில் நம் பொருட்டு நாம பிச்சைக்காக பவானி அக்கா போகிறாள்" "பகவானின் நாம பணி செய்யும் அன்பர்கள் எல்லாம் என் அங்கம்" என்றெல்லாம் கனிவுடனும் கருணையுடனும் நினைவு கூர்வார் குருநாதர். பவானி அக்காவோ "நாம் என்ன செய்து விட்டோம். நமக்காக இப்படி குருநாதர் பரிந்து பேசுகிறாரே" என்று நினைப்பார்.

நாமகீர்த்தனம் நடக்கும் இடங்களை பார்க்க குருநாதரே நேரில் சமயத்தில் வருவார்கள். சாக்கடை, குப்பை, அசிங்கம் என்று நாமே தயங்கும் வழிகளில் எல்லாம் கூட, கிடுகிடென்று செல்வார்கள். ஏதாவது கோவிலில் அமர்ந்து இருங்கள் என்றால் குருநாதர் கேட்க மாட்டார். மக்கள் இருக்குமிடத்தை தேடி சென்று அருளுவார். சிவகாசியில் நடந்த கூட்டு பிரார்த்தனைகளில் "செய்த பாவங்களை பற்றி கவலைப்படாதீர்கள். நாமம் சொல்லுங்கள். உங்கள் பாரத்தை வேண்டுமானால் இறைவன் என் மீது போடட்டும்" என்று கருணை மேலிட பேசுவார்கள்.

"சிவகாசி தொழிலாளிகளின் தோள் மேல் கை போட்டு நாமகீர்த்தனம் செய்ய ஆசை" என்று குருநாதர் சொல்வதுண்டு. ஒரு தடவை சிவகாசியில் தெருவீதியில் நடக்கையில், கோலி குண்டு விளையாடும் சிறுவர்கள் குருநாதரை பார்த்து "ஹரே ராம சாமியார் போகிறார்" என்ற உடன், திரும்பி அனைவரையும் தன் அருகில் அழைத்து "எங்கே நாமம் சொல்லு" என்றார்கள். அவர்கள் குதித்து குதித்து, நாமம் சொல்ல குருநாதருக்கு ஒரே மகிழ்ச்சி வந்து விட்டது. அப்பொழுது சாக்கடை சுத்தம் செய்யும் இரு தொழிலாளர்கள் வந்து குருநாதரை வணங்கினர். அவர்கள் கைகளை அப்படியே இறுக பிடித்து கொண்டார் குருநாதர். ஒரு கடைக்குள் ஏறி, கல்லாவிலேயே உட்கார்ந்து விட்டார். வியாபாரம் நன்றாக வளருகிறதா என்று கேட்டு அருளினார். குழந்தைகள் நாமம் சொன்னதை கேட்டவுடன், குருநாதருக்கு அத்தகைய மகிழ்ச்சி. கருணை அப்படி பொங்கி வந்து விட்டது என்கிறார் பவானி அக்கா!

முதலில் பவானி அக்காவின் உறவினர்களும் அன்பர்களும் நண்பர்களும் கூட, மக்கள் நாமம் சொல்ல தொழில் நகரான சிவகாசியில் வர மாட்டார்கள் என்று அபிப்ராயப்பட்டனர். ஆனால் குருநாதர் அருளாலும், பவானி அக்கா, திரு.குமாரவேல் மற்றும் அன்பர்களும் சேர்ந்து ஆற்றிய பணிகளாலும் மஹாமந்திர நாம கீர்த்தனம் இன்று சிவகாசியில் வெள்ளமாய் பரவி எல்லோருக்கும் நன்மைகளை அள்ளி வீசுவதை பார்க்க முடிகிறது.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

---

கேள்வி: நான் எப்பொழுதும் முடிந்த வரையில் தனிமையில் இருந்து வருகின்றேன். எந்த வேலைகளிலும் சம்பந்தப்படுத்தி கொள்வதில்லை. இறை அருள் பெற இது போதுமல்லவா?

பதில்: அது மட்டும் போதாது. நாமசங்கீர்த்தனம், தியானம், ஜபம், பாராயணம், ஏதாவது செய்து கொண்டே இருக்கவேண்டும். ஒருவருக்கு ஞானமும் பக்தியும் சித்திக்காதபொழுது, அது சித்தித்து விட்டதாக நினைப்பதை விட, ஆபத்து எதுவும் இல்லை. அதை விட, உலக ஆசைகளுடன் வாழ்வது எவ்வளவோ மேல்.

ஒருவன், தனக்கு ஞானத்தை அடைவதற்கான தகுதிகள் இல்லாதபொழுது, அந்த தகுதிகளை சம்பாதித்து கொண்டு ஞான அப்யாசம் செய்ய வேண்டும். விடாமல் நாமசங்கீர்த்தனம் செய்து வந்தாலே, அந்த தகுதி வந்து விடும்.

கேள்வி: மீரா, பத்ராசலம் ராமதாசர் போன்றவர்கள் தாங்க முடியாத அளவில் அவமானம், துயரம் தண்டனைகளை அனுபவித்தும் அவர்கள் தாங்கள் செய்து வந்த கீர்த்தனத்தை விடவில்லை என்று அறியும்பொழுது வியப்பாக உள்ளதே? எப்படி அவர்களால் அது முடிந்தது?

பதில்: இதற்கு மிகவும் கீழே இறங்கி ஒரு உதாரணம் சொன்னால்தான், அது உங்களுக்கு புரியும். மது அருந்தி அருந்தி அதற்கு அடிமையானவனுடைய சரீரம் பலவிதமான வியாதிகளால் பீடிக்கப்படும். கிட்னி, லிவர் போன்ற எல்லா உறுப்புகளும் பாதிக்கப்படும்.

அந்த நிலையிலும், உறவினர்கள், நண்பர்கள், மருத்துவர்கள் மது அருந்தாதே என்று தடுத்தும், எவ்வளவோ விதத்தில் அவனுக்கு எடுத்து சொன்னாலும் கூட அவன் மது

அருந்தும் பழக்கத்தை விடாமல் தொடர்ந்து செய்கின்றான். அது போலவே சூதாட்டத்திற்கு பழக்கமானவனும் அப்படித்தான். அவன் சூதாடி சூதாடி, கடன் அதிகமாகி, குடும்பமே நடு தெருவிற்கு வந்தாலும் கூட, அவன் சூதாடுவதை விடுவதில்லை.

கெட்ட விஷயங்களில், இவர்களே இப்படி இருக்கும்பொழுது, மஹாபக்தர்களான அவர்கள் எப்படி நாம சங்கீர்த்தனத்தை விடுவார்கள்? அவர்களுக்கு, அது ஒரு அவஸ்தை.

கேள்வி: கதை கேட்டு கொண்டிருந்தாலே போதுமா? ஞான பக்தி வைராக்கியங்கள் சித்தித்து விடுமா? அது எப்படி சாத்தியமாகும்?

பதில்: ஒவ்வொருவருடைய மனதும் சாத்வீக, ராஜஸ, தாமச குணங்களை அடிப்படையாக கொண்டது. இவைகளை ஏதோ பொருள்களை அடுக்கி வைப்பது போல், மனதில் அடுக்கி வைக்கவில்லை. வெளி இந்திரியங்கள் எந்த எந்த குணத்தை தூண்டும் விஷயத்தை கேட்டு, பேசி, பார்த்து, தொட்டு, முகர்ந்து, உண்டு, தன்னை சம்பந்தப்படுத்தி கொள்கின்றதோ, உடனே அந்த அந்த வாசனைகளை, மனது பற்றி கொள்கின்றது. அவைகள் தூண்டப்படுகின்றது.

நாத்திகர்களுடைய பிரசங்கங்களை அடிக்கடி கேட்டு அந்த மாதிரியான நூல்களை படித்து, அதையே சிந்தனை செய்தால், மனதில் குதர்க்கமும் நாத்திகமும் வலுக்கும். அதுபோல், சிருங்காரமான சினிமா கதைகள், படங்கள் இவைகளை பார்த்து கொண்டோ படித்து கொண்டோ இருந்தால், மனதில் காம ரசம் தூண்டப்படும். அது போல் மொழி உணர்ச்சி, இன உணர்ச்சி, தேசிய உணர்ச்சி போன்றவைகளை அவ்வப்பொழுது பலர் கூட்டங்கள் போட்டு, பேசியும், எழுதியும் வருகின்றனர். இவைகளை கேட்டுக்கொண்டும், படித்து கொண்டும் இருப்பவன் அதில் உணர்ச்சி வசப்படுகின்றான்.

அது போல், ஒருவன் ஸ்ரீமத்பாகவதமான ஹரி கதையை

கேட்டானானால், அவன் மனதில் சாத்வீகமான உணர்வு தூண்டப்பட்டு பக்தி ரசம் ஏற்படும்.

அவன் எப்பொழுதுமே, ஹரி கதையை விடாமல் சிரத்தையுடன் கேட்டு கொண்டே இருந்தானானால், அவன் ஹிருதயத்தில் சாத்வீக வாசனை அதிகமாக வளர்ந்து அது நிரந்தரமாகி விடும். அது அதிகமாகி நிரந்தரமான நிலையை அடையும்பொழுது, தானாகவே அவன் ஹிருதயத்தில் உள்ள மற்ற தாமஸ, ராஜஸ வாசனைகள் முழுவதும் அழிந்து விடும்.

இந்த நிரந்தர சாத்வீக வாசனை, அவனுக்கு, ப்ரேம பக்தியை கொடுத்து, சகுண சாக்ஷாத்காரத்தை கொடுத்து, ஞானத்தையும் கொடுத்து விடும்.


**வீட்டு மனைகள் விற்பனைக்கு**

**(PLOTS FOR SALE AT)**

மேலும் சில மனைகளே உள்ளன.

ஸ்ரீப்ரேமிக வரதன் நகர், மாஹாரண்யம்

சிறப்பு அம்சங்கள்

* மலைகளும் ஏரிகளும் அமைந்த இயற்கை வளம் பெற்ற சூழல்
* LAYOUT AREAவில் முழுமையான COMMON COMPOUND WALL மற்றும் விசாலமான தார் சாலைகள்
* உடனடியாக வீடு கட்டி குடியேற வசதியான இடம்

*(For Details contact)*

'VIJAY ASSOCIATES ' PH:9940043234

A-1 VIJAY VATICA, # 18/33, SARAVANA STREET, T-NAGAR, CHENNAI 600 017. PH: **9940043234**

ADVT



# பாகவத பழம்

**பாகம் 2 – அத் 17**

–ஸ்ரீஸ்வாமிஜி (35)

மஹரிஷிகளின் ஆசீர்வாதத்தை பெற்று விட்டு, வந்து கொண்டிருந்த பரீக்ஷித், கிழக்கு நோக்கி உள்ள குருக்ஷேத்திரத்தை அடைந்தான். அப்பொழுது அவன், பூமியும் தர்ம தேவதையும் பேசிக்கொண்டிருப்பதை பார்த்தான்.

உடல் வெளுத்து, பயத்தினால் சிறுநீரைக் கழித்துக் கொண்டே நின்று கொண்டிருந்தது ஒரு காளை. அதோடு மட்டும் அல்லாமல் அந்தக் காளை ஒரு காலினால் மட்டுமே நின்று கொண்டிருந்தது. அதேசமயத்தில் ஒரு காலினால் நிற்க முடியாமல் தவித்துக் கொண்டும் இருந்தது. அது சாதாரண காளை அல்ல. தர்மதேவதையே காளையின் உருவத்தை எடுத்து வந்திருந்தது. அந்தக் காளையை கருணையே இல்லாத பிராமணன் அல்லாத ஒருவன் துன்புறுத்திக் கொண்டிருந்தான். ஏற்கனவே அது ஒரு காலால் நின்று கொண்டு தவித்துக் கொண்டிருந்தது, இவன் வேறு அதை துன்புறுத்திக் கொண்டிருந்தான்.

விலங்குகளில் புலி, சிங்கம் போன்றவை ராஜஸ விலங்குகள். எருமை, பன்றி போன்றவை தாமஸ விலங்குகள். பசு, மான் போன்றவை சாத்வீகமானவைகள். அதிலும் பசு கருணையே உருவானது. தேவர்களைக் குறித்து செய்யப்படும் வேள்விகளுக்கு பாலைத் தருகின்றது. அந்தப் பசுவின் உருவத்தை பூமாதேவி தரித்துக் கொண்டிருந்தாள். பசுவான பூமியும் தர்மமான காளையும் சேர்ந்தால்தான் உலகம் சரியாக இயங்கும் என்பதைத்தான் இது காண்பிக்கிறது போலும். அந்தப் பசுவை வேறு அவன் காலால் எட்டி எட்டி உதைத்துக் கொண்டிருந்தான். பசு பூஜைக்கு உரியது. அதைக் காலால் எட்டி எட்டி உதைத்துக் கொண்டிருக்கின்றான். தர்மத்தைத்

துன்புறுத்தி பூமியை வேறு எட்டி உதைக்கின்றான். கன்று இல்லாத பசு, ஆகாரமும் இல்லாததால் இளைத்து கத்துவதற்குக் கூட, சக்தியில்லாமல் கண்களில் நீரை சொரிந்துகொண்டு, தீன ஸ்வரத்துடன் கத்திக் கொண்டிருந்தது. பரீக்ஷித் இந்தக் காட்சியைப் பார்த்தார். அவர்களைப் பார்த்து "நீ யார்? ஏன் இப்படி இந்தப் பசுவையும் காளையையும் இம்சிக்கின்றாய்?'' மேலும் பசுவையும், காளையையும் பார்த்து மங்களகரமான வார்த்தைகளைக்கூறி சமாதானப்படுத்தினான்.

பரீக்ஷித் மேலும் கூறினான். "எந்த அரசனது ஆட்சியில் துஷ்டர்களால் எல்லா மக்களும் பயப்படுகின்றார்களோ அந்த அரசருடைய ஆயுளும், பாக்யமும், புண்யலோகமும் நாசத்தை அடைந்துவிடும். துஷ்டர்களை அழித்தால்தான் நல்லவர்களான மக்கள் நிம்மதியுடன் வாழமுடியும். ஆகவே ஒரு அரசன் துஷ்டர்களை அடக்குகின்ற விஷயத்தில் கருணையே காட்டக் கூடாது. ஆபத்து இல்லாத காலத்தில் எவன் ஒருவன் தர்மத்தை விடுகின்றானோ அவனை சிக்ஷிக்க வேண்டியதும் அரசனின் முதல்கடமை'' என்றார்.

பரீக்ஷித் பேசியதை முழுவதும் கேட்ட பிறகு தர்மதேவதை பதில் உரைக்கலாயிற்று. "உலகத்தில் எல்லோருடைய வாழ்க்கையிலும், ஜீவராசிகள் உள்பட சுகதுக்கங்கள் ஏற் படுகின்றன. அந்த சுக துக்கத்திற்கு காரணம் என்ன என்பதை அலசிப்பார்த்த பெரிய மஹரிஷிகள்கூட ஒருமித்த ஒரு முடிவிற்கு வரவில்லை. யோகமார்க்கத்திலோ, சுகதுக்கத்திற்கு தனது ஆத்மாவே காரணம் என்று கூறப்படுகின்றது. ஜோதிடர்கள் கோள்கள்தான் காரணம் என்கின்றனர். மீமாம்ஸமதமோ கர்மாதான் காரணம் என்கின்றது. சார்வாகம் என்ற மதமோ ஸ்வபாவம்தான் காரணம் என்கின்றது. ஈஸ்வரன்தான் காரணம் என்று மற்ற சிலருடைய அபிப்ராயம். நீயே யூகம் செய்து இதற்கான பதிலைத் தெரிந்துகொள்'' என்கிறது.

அதர்மத்தை செய்தவனுக்கு எந்த நரகம் உண்டோ அது பாவம் செய்யத் தூண்டியவனுக்கும், அந்த பாபத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவனுக்கும். ஏதோ ஒருவிதத்தில் அந்த பாவத்திற்குக் காரணமானவனுக்கும், செய்தவனை காட்டிக்

கொடுத்தவனுக்கும் உண்டு. ஆகவேதான் நான் தட்டிக் கேட்கிறேன். காளை முதலில் பேசவே பேசாது. மேலும், இவ்வளவு அழகாகவும், சாமர்த்தியமாகவும் பேசுவதால் நீ காளை வடிவெடுத்த தர்மதேவதையே ஆகும்'' என்று புரிந்து கொண்டு பேசலானான்.

தர்மதேவதையான உனக்கு நான்கு கால்கள். தவம், தூய்மை, தயை, ஸத்யம் என்பதே அவைகள். கர்வம், தகாத விதத்தில் பெண்களுடன் தொடர்பு, புத்தியில் குழப்பம் இவற்றால் மூன்று கால்கள் அழிக்கப்பட்டு விட்டன. ஸத்யம் என்ற ஒரு காலினால் மட்டுமாவது நீ நிற்கலாம் என்று பார்க்கின்றாய். அதையும் விடமாட்டேன் என்று கலிபுருஷன் வெட்டப் பார்க்கின்றான்'' என்றான் பரீக்ஷித்.

சாஸ்திரமும், தர்மமும் தெரியாதவர் பூமியை ஆளப்போவதை நினைத்து பூமி அழுகின்றாள். அதனால் மக்கள் மத்தியில் எங்கும் எல்லாவற்றிலும் குளறுபடியே காணப்போகின்றது என்பதையும் பரிக்ஷித் புரிந்து கொண்டான். இவர்களை துன்புறுத்துபவன் கலியுகத்தினுடைய புருஷன் என்பதையும் புரிந்து கொண்டு அவனை வெட்டுவதற்கு கத்தியை எடுத்தான். அப்பொழுது அந்த கலிபுருஷன் நடுநடுங்கி பரீக்ஷித்தின் கால்களில் விழுந்தான். பயந்த கலிபுருஷன் பரீக்ஷித்திடம், தாங்கள் ஆட்சி செய்கின்ற வரையில் தங்கள் ராஜ்யத்தில் நுழைய மாட்டேன்'' என்றான். அதைத்தவிர நீங்களே சில இடங்களை நான் வசிப்பதற்கு என்று கொடுத்தால் கலியுகத்திலும்கூட நான் அங்கு மட்டுமே இருப்பேன்'' என்றான்.

(கனியும்)

முன் அட்டை – ஜனவரி 16 & 17, மதுரபுரி ஆஸ்ரமத்திற்கு பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் விஜயம்

பின் அட்டை – வேலூர் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை – ஜனவரி 1, 2013



# அனுபவம் 1
# – மாயை

–ஸ்ரீபத்மபாதர்

ஒரு நாள் நான் படுத்துக்கொண்டிருந்தேன். எனக்கு இடதுபக்க இதயம் லேசாக வலிக்க ஆரம்பித்தது. அது கொஞ்சமாக ஆரம்பிக்கும்பொழுது, அது ஒரு வாய்வுத் தொல்லையாக இருக்கும் என்று நினைத்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அந்த வலி அதிகமாகிக்கொண்டே வந்தது. அப்படி அதிகமாக அதிகமாக, நமக்கு இப்பொழுது மாரடைப்பு வந்துவிடுமோ என்று நினைத்து பயந்தேன். அப்படி மாரடைப்பு வந்தால் உடலில் பலவிதமான அறிகுறிகள் உடலில் ஏற்படும் என்று கேள்விப்பட்டிருக்கின்றோமே, ஒரு பெரிய யானை மிதிக்கின்றார்போல் இருக்கும் என்று சொல்கின்றார்களே, அந்த மாதிரி அறிகுறிகள் எதுவும் இல்லாததால், நமக்கு மாரடைப்பு ஒன்றும் வரவில்லை என்று சமாதானப்படுத்திக்கொண்டேன். ஆனால் அந்த வலி இருதயத்தின் இருபக்கமும், நன்கு பரவி, வலி அதிகமாகிக்கொண்டே இருந்தது. இருதயமும் கனக்க ஆரம்பித்தது. நன்றாக வியர்த்துக்கொட்டியது. அதனால் நமக்கு மாரடைப்புதான் வந்துவிட்டது என்று பயந்தேன். எழுந்துகொள்வோம் என்று முயற்சித்தேன். ஆனால் என்ன முயன்றும் எழ முடியவில்லை. அந்த சமயத்தில் துணைக்கு யாரையாவது கூப்பிடுவோம் என்று நினைத்தேன். ஆனால் என் அருகில் எந்த ஒரு தொலைபேசியோ, கைபேசியோ இல்லை. வீட்டிலும் யாரும் இல்லை. அதனால் நாம் இறக்கக்கத்தான் போகின்றோம் என்று தோன்றியது.

அப்பொழுது நான், வாழ்வில் நடந்த சம்பவங்களை எல்லாம் நினைவுபடுத்திக்கொண்டேன். எவ்வளவுமுறை நாம் பகவானைப் பார்க்கவேண்டும் என்று பிறர் சொல்லக் கேட்டிருப்போம். எவ்வளவுமுறை பேசியிருப்போம், எவ்வளவு கதை சொல்லியிருப்போம், எவ்வளவுமுறை கதை கேட்டிருப்போம், ஆனால், இப்பொழுது பகவானை நேரில்

பார்க்காமலேயே இறக்கப்போகின்றோமே, இந்தப் பிறவி இப்படி வீணாகிவிட்டதே, நாம் எவ்வளவு நேரத்தை விரயம் செய்துவிட்டோம் என்றெல்லாம், ஒன்றன்பின் ஒன்றாக சிந்தனைகள் ஆழமாக வந்துகொண்டே இருந்தது. மிகவும் வருந்தினேன்.

அப்பொழுது, எனக்கு பாகவதத்தில் வரும், அஜாமிளனின் கதைதான் ஞாபகத்திற்கு வந்தது. அவனைப்போல்தானே, நாமும் வாழ்க்கையை வீணடித்துவிட்டோம், அவனுக்கோ அந்திம காலத்தில் நாராயணஸ்மரணம் இருந்ததால், பகவானை அடைந்தானே, அதனால் நாமும் அவனைப்போல் பகவன்நாமத்தைச் சொல்லவேண்டும்; வீணாக மனதை போட்டு குழப்பிக்கொள்ளக்கூடாது என்று நினைத்தேன். ஆனால் மனதில் மற்றுமொரு சந்தேகமும் தோன்றியது. "இப்பொழுது நினைவிருக்கின்றது அதனால் நாமம் சொல்கின்றோம், நினைவு தப்பிவிட்டால் அப்படி நாமம் சொல்ல முடியுமா? நமக்கு கடைசி தருணத்தில் நினைவு தவறிவிட்டால் என்ன செய்வது?" என்றும் சிந்தனைகள் வந்தன. சரி ஏதாவது ஸ்வாமி ப்ரசாதம் அல்லது கங்கா தீர்த்தம் எடுத்துகொள்வோம் என்றால், எழுந்திருக்கவே முடியவில்லையே.

சரி என்னதான் நடக்கும்? கதைகளில் வருவதுபோல் எம கிங்கரர்கள் படு கோரமாய், கொம்புகளுடன், நீட்டிய பற்களுடன் வருவார்களோ? நம்மை எமலோகத்திற்கு அழைத்துச் செல்வார்களோ? சொர்க்கத்திற்கு போவோமோ? அல்லது நரகத்திற்குப் போவோமோ? இல்லையென்றால், பித்ரு லோகம் என்று சொல்கின்றார்களே, அங்கு செல்வோமோ? என்று ஒரு பயம் வந்தது.

சீ! சீ! நாம் உலகில் எவ்வளவு நல்ல காரியங்கள் செய்திருக்கின்றோம்? எவ்வளவு பெரியவர்களைப் பார்த்திருக்கின்றோம்? எவ்வளவு கோயில்களுக்கு சென்றிருக்கின்றோம்? நமக்குப்போய் எப்படி நரகம் கிடைக்கும்? நாம் நிச்சயம் வைகுண்டம்தான் செல்வோம். அதற்கு வைகுண்டத்திலிருந்து விமானம் வரத்தான் போகின்றது.. ஆனால் பாகவதத்திலேயே கூட, அப்படியெல்லாம் ஒன்றும்

சொல்லவில்லையே. நாரதருக்கு சாதுக்களின் சங்கத்தால் பூரணமாக பகவத் தியானம் சித்தித்திருந்தும், அவரிடமே பகவான் ‘‘அவிபக்வ கஷாயாணாம் - உனக்கு பூரண பக்குவமில்லை, மறுபிறவியில்தான் அது ஏற்படும் என்று சொல்லிவிட்டானே, நாரதருக்கே இந்த கதி என்றால், நம்மை என்னவென்று சொல்வது?

ஜடபரதர் தன் வாழ்நாளில் எவ்வளவு தவம் செய்தார்? இரவு பகலாக தியானம் செய்தார் என்றல்லவா இருக்கின்றது. அவருக்கு எவ்வளவு வைராக்கியம், ஞானம் இருந்தது? அவர் ஒரு முறையாவது க்ருஷ்ணா என்று சொல்லியிருக்கமாட்டாரா என்ன? ஆனால் அவர் மானாகப் பிறக்கவேண்டி வந்ததே? முசுகுந்த சக்கரவர்த்திக்கு, பகவானின் தரிசனம் நேருக்கு நேர் கிடைத்த பின்னரும்கூட அவரிடம் பகவான், "நீங்கள் மற்றும் ஒரு பிறவி எடுத்து முக்தியடையுங்கள்" என்று சொல்லிவிட்டானே?

சரி, குருவை ஆஸ்ரயித்தால், நிச்சயமாக முக்தி என்கின்றார்கள். ரமணர் கூட, தனது தாய்க்கும், தன்னிடம் பிரியமாய் இருந்த ஒரு சீடருக்கும், ஒரு பசு மாட்டிற்கும், ஏன் ஒரு நாய்க்கும், காகத்திற்கும் கூட முக்தி கொடுத்தார் என்று இருக்கின்றதே, ஆனால் அவர்கூட கடைசி காலத்தில் தன் தாய்க்கு இருதயத்தில் தன் கையை வைத்து முக்தி கொடுத்தார் என்றல்லவா இருக்கின்றது? அப்படியானால், அவர் யார் யாருக்கெல்லாம் கை வைக்கவில்லையோ, அவர்கள் கதியெல்லாம் என்ன? என்றெல்லாம் தோன்றியது. நாமும் ஒரு குருவை ஆஸ்ரயித்திருக்கின்றோமே, அவர் நம்மை மகாமந்திரம் நிச்சயம் காப்பாற்றும். அதைச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கின்றாரே அதைச் சொல்வோம் என்று குருநாதரின் புகைப்படத்தைப் பார்த்துக்கொண்டு, சொல்ல ஆரம்பித்தேன். ஆச்சரியம் பாருங்கள். இருதயத்தில் ஏற்பட்ட வலி போய்விட்டது. தூக்கமும் நன்றாக வந்தது. நன்கு உறங்கினேன். விடியற்காலை எழுந்தேன். வழக்கம்போல் பேப்பரில் நியூஸ் படித்தேன். தொலைக்காட்சி பார்த்தேன். என்ன சொல்வது? மற்றும் ஒருநாள் இப்படியே கழிந்தது.

# ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் – 1

சென்னை ராமகிருஷ்ணா மடம் – ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா ஜூலை 15, 2012 அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஆற்றிய உரை

---

பரதன் என்கிற ராஜா ஆண்டதால் நம் தேசத்திற்கு பாரதம் என்ற பெயர் வந்தது என்று படிக்கிறோம். இது சரிதான். இருந்தாலும் ஹிருதயத்தில் சதா பிரகாசித்தபடி இருக்கும் ஆத்ம ஸ்வரூபத்தில் திளைத்து இருக்கும் மஹனீயர்களுக்கு "பரதாள்" என்று பெயர். "பரதாள்" என்ற சப்தம் ஞானிகளை குறிக்கிறது என்பதாலேயே, பாகவதத்தில் வரும் பரம ஞானியின் சரித்திரம் ஜடபரதர் சரித்திரம் எனப்படுகிறது. அப்படிப்பட்ட ஞானிகள் நிறைந்து இருப்பதால் இதற்கு பரத கண்டம் என்று பெயர்.

உலகில் உள்ள நாடுகளை காட்டிலும், இந்த தேசத்தில் உள்ளது போல் எங்கும் இவ்வளவு கோவில்களோ, புண்ய நதிகளோ கிடையாது. அல்லது இவ்வளவு உத்தம மஹான்கள் இங்கு போல் எந்த தேசத்திலும் அவதாரம் செய்ததில்லை. தத்வ விசாரம் என்பது நம் நாட்டில் தோன்றியது போல் எங்கும் தோன்றியதே இல்லை. இதிஹாச புராணங்கள் நம்மிடையே இருப்பது போல எந்த நாட்டிலும் கிடையவே கிடையாது. நம் நாட்டில் ஆங்காங்கே தோன்றிய பல மஹான்களின் தேவாரம், பிரபந்தம், திருப்புகழ் புனித நூல்கள் போன்றவை எந்த தேசத்திலும் இவ்வளவு கிடையவே கிடையாது. இவை எல்லாம் சேர்ந்ததுதான் நமது பாரத தேசம்.

நமது தேசத்தை குமரி முதல் இமயம் வரை புனித வலம் செய்வதாக வைத்து கொள்வோம். தெற்கே தமிழ்நாட்டில் தாமிரபரணி அருகேதான், ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றினர். மேலே திருவண்ணாமலை வந்தால் ரமணர், சேஷாத்திரி ஸ்வாமிகள், யோகிராம்சுரத்குமார், காஞ்சிபுரம் வந்தால் மஹாஸ்வாமிகள், காவேரிக்கரை ஓரமாக பார்த்தால் பகவன்னாம போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீதர அய்யாவாள், மருதாநல்லூர் சத்குரு ஸ்வாமிகள், சதாசிவ

ப்ரும்மேந்திரர், ஆந்திராவிற்கு போனால் பத்ராசல ராமதாசர், கன்னடம் சென்றால் புரந்தரதாசர் போன்ற மஹான்கள், மஹாராஷ்டிரம் சென்றால் துக்காராம், நாமதேவர், ஞானேஸ்வர் போன்ற எண்ணற்றோர், கூர்ஜரத்திற்கு சென்றால் நரசிம்ம மேத்தா, காந்தி போன்றோர், ராஜஸ்தானில் மீரா, உத்திரபிரதேச பிருந்தாவனில் உதித்து கிருஷ்ண பக்தி செய்த எண்ணற்ற மஹான்கள், வங்காளம் சென்றால் ராமகிருஷ்ணர், சாரதாதேவி, விவேகானந்தர், சைதன்யர், நித்யானந்தர், பஞ்சாப் சென்றாலோ குருநானக், குருகோவிந்த் சிங் என்று நம் நாட்டில் எந்த தேசத்திற்கு சென்றாலும், அங்கங்கே ஏராளமாக மஹான்கள் அவதாரம் செய்திருப்பதை பார்க்கிறோம்.

மேலும் இங்கு தோன்றிய மஹான்கள் அனைவரும் தத்வ ஞானிகள் மட்டுமல்ல; ப்ரும்ம ஞானிகள்; ஜீவன் முக்தர்கள். அத்தகைய ஜீவன் முக்தர்களே மலிந்திருக்க கூடிய தேசம் இது. இது போல் வேறு எந்த தேசத்திலும் கிடையவே கிடையாது. விவசாயி நிலத்தை பரிசோதித்து, "இதில் கோதுமை விளையும், இதில் அரிசி விளையும்" என்று நிர்ணயம் செய்வது போல், இந்த பாரத தேசத்தில் மஹான்கள் விளைவர் என்று விளயாட்டாக சொல்லி விடலாம்.

இந்த தேசத்தின் காற்று, மண், மரங்கள், தீர்த்தங்கள் எல்லாம் தெய்வீகமானவை. இப்படிப்பட்ட தேசத்தில் பகவான் எடுத்த பத்து அவதாரங்களை பிரதானமாக சொன்னாலும் கூட, பாகவதமே, அவதாரங்கள் கணக்கிலடங்காதவை என்று சொல்லி விட்டது. அதே பாகவதம், கலியுகத்தில் பிரத்யக்ஷமான அவதாரம் கிடையாது என்றும் சொல்லி விட்டது. என்ன காரணம்?

பிற யுகங்களில் கம்சன், ராவணன், ஹிரண்யகசிபு போன்ற துஷ்டர்களை சிக்ஷிக்க, பகவான் அவதாரம் எடுக்க வேண்டி வந்தது. இந்த யுகத்தில் இருப்பவர்களோ துஷ்டர்கள் இல்லை; இவர்கள் எல்லோரும் பிரஷ்டர்கள். இவர்களை வதம் செய்ய கூடாது; திருத்த வேண்டும் என்பதற்காக, பகவானே சாதுக்கள் ரூபத்தில் அவதரிக்கிறான் என்று பாகவதமே சூசகம் செய்து விட்டது.

(தொடரும்)

ஒருவன் உயர்ந்த கட்டிடத்தின் மேல் ஏறிக்கொண்டு கீழே பார்த்தால், கீழே இருப்பவை எல்லாம் சிறியதாக தெரியும். தான் கீழே நின்று கொண்டு, மேலே பார்த்தால், எல்லாம் பெரியதாக தெரியும். அதுபோல் "நான்" என்ற அஹங்காரத்தின் மேல் ஏறி நிற்பவனுக்கு தன்னை விட எல்லாம் சிறியதாகவே தோன்றும். பணிவு என்ற குணத்துடன் கீழே இருந்து பார்ப்பவனுக்கு, தன்னை விட எல்லாம் பெரியதாகவே தோன்றும்.

–மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

**சனாதனப் புதிர் : பகுதி – 48** –ஆத்ரேயன் (விடைகள் பக்கம் 28இல்)

1. சாருமதி ப்ரப்ருதி பூஜிதாகாரே என்று முத்துஸ்வாமி தீக்ஷிதர் பாடியிருக்கிறார். இந்த சாருமதி யார்?
2. காணாமல், கோணாமல், கண்டு காயத்ரி ஜபிக்க வேண்டும் என்கிறார்கள். அப்படி என்றால் என்ன?
3. அக்ருவ்ரணர் இவர் யார்? மஹாபாரதத்தில் இவரைப்பற்றி எந்த பர்வாவில் காணப்படுகின்றன?
4. அக்ரூரரின் பெற்றோர் பெயர், மேலும் மனைவி பெயர் என்ன?
5. பிரளய காலத்திலும் அழியாத மரம் எங்கு இருக்கிறது? அதன் பெயர் என்ன?
6. வசிஷ்டரின் நாட்டுப்பெண்; சக்தியின் மனைவி; பராசரரின் தாய் இவரது பெயர் என்ன?
7. அதர்மத்தின் மனைவி, மற்றும் பிள்ளைகள் பெயர் என்ன?
8. வசிஷ்டரின் மனைவியான அருந்ததியின் மற்றொரு பெயர் என்ன?
9. கங்கை தேவலோகத்தில் ஒரு பெயராலும், பூமியில் மற்றொரு பெயராலும், பித்ரு லோகத்தில் வேறு பெயரிலும் காணப்படுகிறது. இதன் பெயர்கள் என்ன?
10. கம்ஸனின் இரு மனைவிகள் பெயர் என்ன? இவர்கள் யாருடைய புதல்வி?

# பாகவதம் யாரிடம் கேட்க வேண்டும்?

–குள்ள ஹரி

பண்டிதர் ஒருவர், ஸ்ரீமத் பாகவத பிரவசனம் ஊர் ஊராகச் சென்று சொல்லி வந்தார். அப்படி பிரவசனம் செய்ய அமரும்பொழுது, தங்கத்தால் ஆன விதம் விதமான ஆபரணங்களை அணிந்து கொள்வார். பதக்கங்களை அணிந்து கொள்வார். காதுகளில் வைரக்கடுக்கன் போட்டுக் கொள்வார். கைகளில் ரத்ன கங்கணம் போட்டுக் கொள்வார். விலை உயர்ந்த ஆடைகள் மற்றும் ஜரிகை வேலைப்பாடுடைய சால்வைகளை அணிந்து கொள்வார். அந்த பண்டிதருக்கு, தன் தேசத்தை ஆளும் ராஜாவிற்கு பாகவதம் சொல்ல வேண்டும் என்று ஆசை. அப்படி சொன்னால், தனக்கு ஏதாவது பட்டம் கொடுத்து அதிகமாக பொருள் தருவார் என்பதே அதற்கு காரணம்.

அதனால் அந்த தேசத்து ராஜாவிடம் சென்று, தன் ஆசையை தெரிவித்தார். ராஜா பண்டிதரை பார்த்து, "எனக்கு நிறைய அலுவல்கள் உள்ளன. அதனால் இப்பொழுது என்னால் நிம்மதியாக பாகவதம் கேட்க முடியாது. நான் அரண்மனைக்குள்ளாகவே தங்களுக்கென்று ஒரு இடம் தருகின்றேன். நீங்கள் அங்கு தங்கிக்கொண்டு ஸ்ரீமத்பாகவத பாராயணம் செய்து வாருங்கள். எப்பொழுது எனக்கு நேரம் கிடைக்கின்றாதோ, அப்பொழுது நான் பாகவதம் கேட்கின்றேன்" என்றார்.

பண்டிதரும் சம்மதித்து, அரண்மனையில் தங்கிக்கொண்டு ஸ்ரீமத்பாகவத பாராயணம் செய்து வந்தார். ஒருமுறை பாராயணம் முடிந்தவுடன், ராஜாவிடம் வந்து, "இப்போது பாகவதம் சொல்லட்டுமா" என்பார். ராஜாவோ, "மற்றும் ஒருமுறை பாராயணம் செய்யுங்கள்" என்பார். பண்டிதர் பாராயணம் முடித்து, ராஜாவிடம் வந்து பாகவதம் சொல்ல


அனுமதி கேட்பதும், ராஜா அவரை மீண்டும் பாகவதம் படிக்கச் சொல்வதும், இப்படி பல காலத்திற்கு தொடர்கதையாக நடந்து வந்தது.

சில காலமாக தன்னிடம் பண்டிதர் வராததை, ராஜா கவனித்து, அவரைப் பற்றி விசாரித்தார். அப்பொழுதுதான் அவருக்கு, "ஸ்ரீமத் பாகவதத்தை தனிமையில் அமர்ந்து மீண்டும் மீண்டும் பாராயணம் செய்து வந்ததால், உயர்ந்த ஞான பக்தி வைராக்கியம் சித்தித்து விட்டது. அதனால் அவர் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல், காட்டிற்கு கிளம்பிச் சென்று விட்டார்" என்று தெரிய வந்தது. அந்த ராஜாவிற்கு இந்த விஷயம் தெரிய வந்ததும், மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். தன்னுடைய அரசாட்சியின் பொறுப்பை, தன் மகனிடம் ஒப்படைத்து அவனுக்கு பட்டம் கட்டினான். அந்த பண்டிதரிடம், ஸ்ரீமத் பாகவதம் கேட்க அவர் இருக்கும் இடத்தைத் தேடி, காட்டிற்கு புறப்பட்டான்.




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited

## பகுதி 47

1. நந்திவர்தன் (சல்ய பர்வா)

2. குபேரனின் புதல்வர். இவர் சகோதரர் மணிக்ரீவன்

3. வஸுதேவரின் அநேக மனைவிகளில் ஒருவர் - மற்றவர்கள் தேவகி, பத்ரா, ரோஹிணி முதலானோர்.

4. குணகேசி. நாக குமாரனான சுமுகனை மணந்தாள்

5. பூமன்யு

6. பிரஜாபதி தக்ஷனால் சந்திரன் பீடிக்க உண்டாக்கப்பட்ட வியாதி. இதை க்ஷயரோகம் என்று கூறுகிறார்கள்

7. வைசாலாக்ஷம்

8. பலராமனின் மனைவி; அதிதி தேவியின் பெயர்; 27 நக்ஷத்திரங்களில் ஒன்று

9. இது யமுனை நதியில் உள்ள தீவு. இங்கு பராசரருக்கும் சத்யவதிக்கும் வியாசர் பிறந்தார்.

10. ரைவத பர்வதத்திற்கு சமீபத்தில் உள்ள அழகான காடு; க்ருஷ்ண பரமாத்மாவின் சங்கு; ஐந்து ரிஷிகளின் அம்சத்துடன் தோன்றிய அக்னி. இதற்கு மற்றொரு பெயர் தபம்.

11. கஷ்யபர்/கத்ரூ இவர்களுக்குப் பிறந்த முக்கியமான ஸர்ப்பம். ரிஷி ஜனமேஜயரது ஸர்ப்ப யாகத்தில் அத்வர்யு; மற்றொரு ரிஷி ஜனமேஜயரது சர்ப்ப யாகத்தை நடத்திக் கொடுத்தவர்களில் ஒருவர்; யக்ஷராஜன் - பகவான் சிவனுடைய நண்பர். ஸ்மசான பூமியில் வசிப்பவர்.

## பகுதி 48

**1.** சௌராஷ்டிர தேசத்தின் ராணி ஸுசந்திராவின் பெண். சாருமதி வரலக்ஷ்மிதேவியை பூஜித்தாள். தனது தாய் லக்ஷ்மிதேவியை அவமதித்ததால் இழந்த செல்வத்தை, தாயையும் வரலக்ஷ்மியை பூஜிக்க செய்து இழந்த செல்வத்தை பெறச்செய்தாள்.

**2.** சூரியனை காணாத அதிகாலை; சூரியன் நேராக தலைக்கு மேல் இருக்கும் நடுப்பகல்; சூரியன் மறைகின்ற மாலை நேரம் காயத்ரீ ஜபிக்க வேண்டும்.

## சனாதனப்புதிர் பகுதி 48 - விடைகள்- ஆத்ரேயன்

3. பரசுராமரின் தோழா்; பிரியமான சிஷ்யா்; வன பா்வா; உத்யோக பா்வா; அனுஸாசன பா்வா.

4. ஸ்வ பல்லகன் (தந்தை), காந்தினி (தாய்), சுதனு (மனைவி)

5. கயா ; அக்ஷயவடம் என்ற ஆலமரம்.

6. அத்ருச்யந்தி

7. நிருருதி - மனைவி; நைருருதா்கள் - மகன்கள். இவா்களின் பெயா் - பயம்; மஹாபயம்; ம்ருத்யு.

8. அக்ஷமாலா.

9. தேவலோகம் - அலக்நந்தா; பித்ருலோகம் - வைதரணி; பூமியில் - கங்கா.

10. அஸ்தி; ப்ராப்தி மகத தேசத்து அரசனான ஜராசந்தனின் புத்ரிகள்.




# ஆலயம் தொழுவது
# சாலவும் நன்று -10



திரு.எஸ்.ராஜப்பன்

12.01.2012 வியாழக்கிழமை காலையில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அன்புக்கட்டளைப்படி அமைந்தகரையிலுள்ள ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவிலுக்குச் சென்று சேவித்துவிட்டு வர, புறப்பட்டுச் சென்றோம். இத்திருக்கோயில் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையிலுள்ள அமைந்தகரை பேருந்து நிறுத்தத்திற்கு அருகாமையில் ஸ்ரீஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலின் பின்புறம், அமைந்தகரை பெருமாள் கோயில் தெருவில் உள்ளது.

இத்திருக்கோயிலின் பிரதான மூர்த்திகளான ஸ்ரீப்ரஸன்ன வரதராஜப் பெருமாளும் ஸ்ரீபெருந்தேவித் தாயாரும் தனித்தனி சன்னிதிகளில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றனர். மற்றும் இங்கு ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள், ஸ்ரீக்ருஷ்ணன், ஸ்ரீகோதண்டராமன், ஸ்ரீரெங்கநாதர் இவர்களுக்குத் தனித்தனி சன்னிதிகள் உள்ளன. ஸ்ரீஆண்டாள், ஸ்ரீராம பக்த ஆஞ்சனேயர், ஸ்ரீகருடாழ்வார், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீநம்மாழ்வார் மற்ற ஆழ்வார் ஆச்சாரியர்கள் இங்கு சேவை சாதிக்கிறார்கள்.

இத்திருக்கோயிலின் முன்புறம் ஐந்து நிலைகளைக் கொண்ட கோபுரம் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கின்றது. கோபுர வாயிலைத் தாண்டி உள்ளே நுழைந்ததும் உயர்ந்த த்வஜஸ்தம்பம் (கொடிமரம்) அமைந்துள்ளது. அமைந்தகரை என்னும் திருநாமம் இப்பகுதிக்கு ஏற்படக் காரணமாகக் கூறப்படும் செவிவழிச் செய்தியைக் காண்போம்! தற்பொழுது கோயம்பேடு என்று அழைக்கப்படும் பகுதி முற்காலத்தில் கோசை மாநகர் என அழைக்கப்பட்டதாம். அஸ்வமேத யாகக் குதிரைகளை லவகுசர்கள் இப்பகுதியில் கட்டிப்போட்டார்களாம். அக்குதிரையைத் தேடி வந்த ராம லக்ஷ்மணர்கள் வந்து அமர்ந்த கரையே இப்பொழுது அமைந்தகரையென்றும் அமிஞ்ஜிகரை என்றும் கூறப்படுகின்றது. இத்திருக்கோயில் பல்லவ மன்னர்கள்

காலத்தில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இங்கு மூலவர் ஸ்ரீப்ரஸன்ன வரதராஜப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலத்துடன் அருட்காட்சியளிக்கின்றார். இவருக்கு தேவராஜன் என்றும் அருளாளன் என்றும் திருநாமங்கள் உள்ளன. உத்ஸவமூர்த்தி ஸ்ரீதேவி பூதேவி ஸமேதராக பேரருளாளன் என்றும் திருப்பெயருடன் திவ்யமங்கள விக்கிரகமாகக் காட்சி கொடுக்கிறார்.

இத்திருக்கோயிலில் சித்திரை மாதம் எம்பெருமானாரின் திருஅவதார உத்ஸவம் பத்து நாட்கள் நடைபெறுகிறது. ஸ்ரீப்ரஸன்ன வரதராஜருக்கு வைகாசி மாதம் 10 நாட்கள் ப்ரம்மோத்ஸவம் நடக்கிறது. ஆனி மாதம் கொடை உத்ஸவம் நடக்கிறது. ஆடி மாதம் ஸ்ரீஆண்டாளுக்கு 10 நாட்கள் திருஆடிப்பூர அவதார உத்ஸவம் சிறப்பாகக் கொண்டாடப்--படுகிறது. ஆவணியில் ஸ்ரீஜெயந்தி உத்ஸவமும் புரட்டாசி மாதம் தாயாருக்கு நவராத்திரி உத்ஸவமும், ஸ்ரீவரதராஜப் பெருமாளுக்கு பவித்ரோத்ஸவமும், ஸ்ரீஸ்ரீநிவாசப் பெருமாளுக்கு திருஅவதார உத்ஸவமும் நடைபெறுகின்றன. ஐப்பசி மாதம் அன்னகூட உத்ஸவம் நடைபெறுகின்றது. மார்கழி மாதம் திருஅத்யயன உத்ஸவம் 21 நாட்கள் நடைபெறுகிறது.

தை மாதம் ரத ஸப்தமி அன்று ஸ்ரீவரதராஜப் பெருமாள் அந்த ஒரே நாளில் ஏழு வாகனங்களில் எழுந்தருளி திருஉலா வந்து சேவை சாதிக்கிறார். மாசி மாதம் தவன உத்ஸவம் நடைபெறுகிறது. பங்குனி மாதம் ஸ்ரீராமநவமி உத்ஸவமும், பல்லவ உத்ஸவமும், பங்குனி உத்திர உத்ஸவமும் நடைபெறுகின்றன. இத்திருக்கோயிலில் வாரம் தோறும் வெள்ளிக்கிழமையன்று தாயாருக்குத் திருமஞ்சனம் செய்யப்படுகின்றது. மற்றும் ஆழ்வார் ஆச்சாரியார்களின் திருநட்சத்திர வைபவங்களும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இத்திருத்தலத்தில் அருகருகே ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயிலும் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோயிலும் அமைந்துள்ளதால், இத் திருத்தலம் ஒரு குட்டி காஞ்சிபுரம்போல் விளங்குகிறது. ஸ்ரீ ப்ரஸன்னவரதராஜப் பெருமாள் கோயிலில் எல்லா எம்பெருமான்களையும் சேவித்துவிட்டுத் திரும்பினோம்.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை



## உழல்வதெல்லாம் உயர்வதற்கே!

ஆனந்திற்கு பதினாறு வயதாகி விட்டது. அவனுக்கு கைவினைப்பொருட்களில் ஆர்வம் அதிகம். தனது பிறந்த நாளை கொண்டாட கைவினைப்பொருள் ஒன்றை வாங்க ஆசைப்பட்டான். அதனால் மண்ணால் செய்யப்பட்ட அழகிய பொருட்களை விற்கும் ஒரு பழைய கடைக்குச் சென்றான். அங்கு போனவனை ஒரு அழகிய மண் குவளை ஈர்த்தது. அதை பார்த்தவுடன் அவன் கடைக்காரரிடம், "ஐயா! அதை காண்பியுங்கள். மிக அழகாய் இருக்கிறது" என்று கண்கள் விரிய கேட்டான். கடைக்காரர் அதை எடுத்து, பத்திரமாய் அவன் கையில் கொடுத்தார். .

அவன் அதை கையில் வாங்கியவுடன், அந்த குவளை அதிசயமாய் அவனைப் பார்த்து பேச ஆரம்பித்தது. அது ஆனந்தைப் பார்த்து பேசியவுடன், அவன் ஆச்சரியம் அடைந்தான். அவன் கண்கள் விரிந்தன. அவன் அது சொல்வதை, கவனமுடன் கேட்க ஆரம்பித்தான்.

அந்த குவளை பேச ஆரம்பித்தது. "ஆனந்த்! என்னைப் பற்றி உனக்கு தெரியாது. நான் ஒரு கோப்பையே அல்ல. வெறும் களிமண்ணாய்த்தான் இருந்தேன். எனது எஜமானர் என்னை எடுத்து நன்றாக என்னை தட்டித் தட்டி, உருண்டையாக ஆக்கினார். நானோ அவர் தட்டுவதை தாங்காமல், "வேண்டாம் வேண்டாம்; அப்படிச் செய்யாதீர்கள்" என்று அலறினேன். அவர் நான் சொன்னதை காதில் போட்டுக் கொள்ளவில்லை. "இன்னும் ஆகவில்லை" என்று மட்டும் புன்முறுவலுடன் சொன்னார். அப்புறம் என்னை ஒரு சக்கரத்தில் இட்டு சுழற்ற ஆரம்பித்தார். எனக்கோ தலை எல்லாம் சுற்ற ஆரம்பித்தது. கத்தினேன். "நிறுத்துங்கள்" என்று அலறினேன். என் எஜமானர், "நான் சொன்னதை காதில் போட்டுக் கொள்ளவில்லை". அவர் மறுபடி

புன்முறுவலுடன், "இன்னும் ஆகவில்லை" என்று மட்டும் சொன்னார்.

அப்புறமும் என்ன ஆயிற்று என்று கேட்கிறாயா? அவர் நான் சக்கரத்தில் சுற்றுகையில், என்னை தொட்டுத் தொட்டு, என் உருவத்தையே மாற்றினார். அப்பொழுதுதான் இந்த கோப்பை உருவம் எனக்கு வந்தது. இதுதான் அவருக்கு பிடித்தது போலும். அப்புறம் சுழற்றுவதை நிறுத்தினார். விட்டு விட்டார் என்று நான் நிம்மதியாய் இருக்கையில், என்னை ஒரு சூளையில் போட்டார். அப்பப்பா! என்ன சூடு அது! நான் அவ்வளவு சூட்டை உணர்ந்ததே இல்லை. நான் கதவைத் தட்டினேன். முட்டிக் கொண்டேன். அப்பொழுதும் என்னை என் எஜமானர் விட்டாரில்லை. கதவின் இடுக்குகள் வழியாக என்னைப் பார்த்தவர், "இன்னும் ஆகவில்லை" என்று தலையை முன்னும் பின்னுமாக ஆட்டி கொண்டு சொல்வதைக் கண்டேன்.

என்னால் மேற்கொண்டு, ஒருகணமும் தாங்க இயலாது நான் உடைந்து விடுவேன் என்று இருக்கையில், என்னை கவனமாய் கையில் எடுத்து ஒரு தட்டில் வைத்தார். அடடா! என்ன குளிர்ச்சியாய் இருந்தது. இதமாய் இருந்தது. நன்றாய் குளிர்ந்த உடன், இப்படியே இருக்கலாமே என்று நான் நினைக்கையில், அவர் என்னை எடுத்து எனக்கு வர்ணம் பூச ஆரம்பித்தார். ஒரே வாசனை நெடியும் புகையுமாய் இருந்தது. எனக்கு மூச்சு முட்டியது. "தயவு செய்து நிறுத்துங்கள்" என்று அலறினேன். என் எஜமானரோ, அதை கேட்டு "இன்னும் ஆகவில்லையே" என்றார். சட்டென அவர், என்னை மறுபடி சூளையில் இட்டார். இப்பொழுதோ, முன்னிலும் இரு மடங்கு வெப்பம். இப்பொழுது, நான் என் எஜமானரிடம், சூடு தாங்காமல் கெஞ்ச ஆரம்பித்தேன். அழுதேன். "என்னால் முடியாது" என்று நான் அலற நினைக்கையில், சூளையைத் திறந்து என்னை மறுபடி ஒரு தட்டில் வைத்தார். நான் மறுபடி இதமாக உணர ஆரம்பித்தேன். சிறிது நேரம் கழித்து, என்னைத் தொட்டு தூக்கிய என் எஜமானர் என்னை ஒரு கண்ணாடி முன் காண்பித்து, "இதோ பார், உன்னை பார்த்துக் கொள்" என்றார். நான் தயங்கித் தயங்கி பார்த்தேன். பார்த்தபோது, என்னையே எனக்கு அடையாளம்

தெரியவில்லை. "இப்பொழுது நீ பார்த்து அதிசயிக்கிறாயே; அந்த அழகு எனக்கு அப்பொழுதுதான் வந்தது. இதோ பார்! என் எஜமானரின் பெயர் என் மேல் எழுதப்பட்டு இருக்கிறது" என்றது. மேலும் அது, "என் எஜமானர் என்னிடம், உன்னால் எந்த கஷ்டம் தாங்க முடியாதோ, அதை நான் உனக்குக் கொடுக்க மாட்டேன். உனக்கு வலிக்கும் என்றும் கஷ்டம் என்றும் மூச்சு முட்டும் என்றும் எனக்கு தெரியாதா? நீ பெரிய அழகுடனும், திடமாகவும், பலரும் போற்றும் வண்ணம் மாற வேண்டியே, இதை செய்தேன். இப்பொழுது உன்னைப் பார்த்தால், உனக்கே பெருமையாய் இருக்கிறது பார். உன்னை மற்றவர்கள் பார்க்கையில் எல்லாம், என் பெயர் இருப்பதால் உன்னை வடிவமைத்தவன் நான் என்பர். நீ எனக்கே சொந்தமாகி விட்டாய் பார்" என்று சொன்னார் என்றது. ஆனந்த் அதை ஆச்சரியமுடன் பார்த்தான். உடனே அவனுக்கு ஒரு நினைப்பும் வந்தது.

அவன் பள்ளியில் படிக்கையில் எல்லாம், கருத்தூன்றி படிக்க வேண்டும் என்பதற்காக, ஆசிரியர் சில சமயம் கண்டிப்பாக இருப்பார். தேர்வு சமயத்தில் காலையில் எழுந்து படிக்க சொல்வார். சரியாக எழுதுகிறோமா என்று பரீக்ஷைகள் வைப்பார். அதெல்லாம் ஆனந்திற்கு கசக்கும். "ஏன் இப்படி எல்லாம் செய்கிறார்?" என்று தோன்றும். "தேர்வில் தேறினால் போதாதா" என்று தோன்றும். இப்பொழுது குவளை பேசுகையில், அவன் தன் ஆசிரியர் தன்னை ஆழமாக படிக்கச் சொல்வதெல்லாம், தன் நன்மைக்கே என்று புரிந்து கொண்டான். தனது உழைப்பெல்லாம் தனது வருங்கால நன்மைக்கே வழிகோலும் என்றும் புரிந்து கொண்டு சந்தோஷப்பட்டான்.

தான் புரிந்து கொண்டதை, ஆனந்த் தன் தந்தையிடம் போய் சொல்லி சந்தோஷப்பட்டான். அவன் தந்தை அந்த குவளையை கையில் எடுத்துக்கொண்டு, "ஆனந்த்! நீ சொல்வது மிக சரி! அது போலத்தான் கடவுளும் நமக்கு சிற்சில கடின தருணங்களை தருவதுபோல் தந்து, அவற்றின் மூலம் நமக்கு அழியாத நன்மைகளைத் தருகிறார்" என்றார். ஆனந்த் மௌனமாய் தலையை அசைத்தான். அந்த குவளையும் அவனை பார்த்துச் சிரித்தது.

## சத்சங்க செய்திகள்

**ஜனவரி 1** வேலூர் வி.கே.என். கிருஷ்ணஸ்வாமி (சி.பி.எஸ்.இ) உயர்நிலைப்பள்ளியில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் 6000அன்பர்கள் கூடியிருக்க மிக சிறப்பாக மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. நாமானுபவம் குறித்து அன்பர்கள் பலர் பேசினர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் நாம மஹிமை குறித்து அருளுரை வழங்கினார்கள். வந்திருந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

**ஜனவரி 11** ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் கன்யாகுமரி ஜயஹனுமானுக்கு மிக சிறப்பாக ஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. ஹனுமாருக்கு சிறப்பு திருமஞ்சனம் செய்யப்பட்டு, வடைமாலையும் சாற்றப்பட்டது. திரளான அன்பர்கள் வந்திருந்து ஆஞ்சநேயர் அருள் பெற்று சென்றனர்.

**ஜனவரி 12** சென்னை நாரதகானசபாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை ஸ்ரீப்ரதீப்ஜானகிராமன் மற்றும் சத்சங்க அன்பர்கள் பாடினர்.

**ஜனவரி 13** ஆழ்வார்பேட்டை நாரதகானசபாவில் "மகாபெரியவாளும் ஏகாம்பரமாகிய நானும்" எனும் பம்மல் ப்ரும்மஸ்ரீ ஏகாம்பர சாஸ்திரிகள் எழுதிய நூலை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வெளியிட, முதல் ப்ரதியை திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம நீதியரசர் ஸ்ரீஅருணாசலம் அவர்கள் பெற்று கொண்டார். காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளால் "சாஸ்திர ரத்னாகர" விருதுபெற்ற "மஹாமஹோபாத்யாய" முல்லைவாசல் ப்ரும்மஸ்ரீ டாக்டர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் கௌரவப்படுத்தப்பட்டார். திருவையாறு பஹூவாஜபேயயாஜி ப்ரும்மஸ்ரீ சுந்தரேச சர்மாவிற்கு ஸ்ரீஸ்வாமிஜி "யக்ஞ தத்வ ரக்ஷாமணி" என்ற ப்ருதுவை வழங்கி கௌரவப்படுத்தினார்கள்.

**ஜனவரி 14 முதல் 20வரை** ஈரோடு ஸ்ரீபாலாஜி பாகவதர் அவர்களின் த்யாகராஜ ராமாயண உபன்யாசம் இடம்பெற்றது. இவ்விழாவினை சாந்தீபனிகுருகுல டிரஸ்டு மற்றும் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இணைந்து நடத்தியது.

**ஜனவரி 23 குடியாத்தம்** அருகில் உள்ள கல்லேரியில் ஸ்ரீசெல்வ விநாயகர் கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு ராமர் பஜனை மண்டபத்தை திறந்து வைத்தார்கள். குடியாத்தம் அருகே ஏரிக்குத்தியில் ஸ்ரீராமர் ஸ்ரீகிருஷ்ணர் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டார்கள். செதுக்கரை, ஏரிக்குத்தி, கார்கூர் இடங்களில் உள்ள ஆலய திருப்பணிகளையும் பார்வையிட்டு வந்தார்கள். சென்னை நாரதகானசபாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை ஸ்ரீப்ரதீப் மற்றும் சத்சங்க அன்பர்கள் பாடினர்.

**ஜனவரி 5** சென்னை காமராஜர் அரங்கில் மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்டு சார்பாக சுமார் 5000 மாணவர்கள் முன்பாக நடைபெற்றது. இதில் பாக்யாஜி மற்றும் ராமுஜி சிறப்பாக பேசினர். **ஜனவரி 3,4,5 – விருதுநகர், சாத்தூர், சிவகாசி நகரங்களில்** மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை எட்டு பள்ளிகளில் 4000மாணாக்கர்கள் முன்பாக முரளிஜி நிகழ்த்தினார். **ஜனவரி 28**இல் பெங்களூர்


rb **rajmani builders**

launches its new project

**"rajmani's mathura"**

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

ADVT

website: www.rajmanibuilders.com

டவுன்ஹாலில் 1200மாணாக்கர்கள் முன்பாக மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. Dr. Anil Rao Paila, Prinicipal Welingkar Institute, விஜய்ஜி, குருமூர்த்திஜி இதில் பேசினர்.

**அமெரிக்கா** மிச்சிகன் மற்றும் ஹூஸ்டனில் கலை நிகழ்ச்சிகள் கூடிய பல சத்சங்கங்களும் பாகவத சப்தாஹங்களும் ராமானுஜம்ஜி முன்னிலையில் நடைபெற்றது. பூர்த்தியாக ஹூஸ்டன் நாமத்வாரில் டிசம்பர் 21-28இல் நடைபெற்ற பாகவத சப்தாஹத்தில் கலந்து கொண்டு ராமானுஜம்ஜி உபன்யாசம் செய்தார்.





ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அண்மையில் பெங்களூர் சென்றிருந்தார்கள். அப்பொழுது ஒரு பக்தர் ஸ்ரீஸ்வாமிஜியிடம், "நீங்கள் ஏன் எப்பொழுதும், கிருஷ்ணரைப் பற்றியே பேசிக்கொண்டு இருக்கின்றீர்கள்" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீஸ்வாமிஜி, "நானே கிருஷ்ணரை பற்றி பேசுவது போதாது என்று நினைத்துக்கொண்டு இருக்கின்றேன். நீங்களோ நான் எப்பொழுதும் கிருஷ்ணரை பற்றியே பேசி கொண்டு இருப்பதாக சொல்கின்றீர்கள்" என்று பதில் கூறினார். –குள்ள ஹரி

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- *ஜனனி*

## ஸ்ரீஹம்ஸதாஸ் பாபாஜி மற்றும் ஸ்ரீகோபாலீபாயி -2

ப்ருந்தாவனத்து ஸ்ரீகோபால்தாஸ் பாபா மிகவும் விரக்தியுடைய ப்ரபாவசாலியான மஹாத்மா. தினமும் ப்ருந்தாவனத்தில் எங்காவது ஒரு இடத்தில் அவரது ப்ரவசனம் நிச்சயமாக நடக்கும். கோபால்தாஸ் பாபா தனது பார்வையை இழந்து விட்டிருந்தார். கதையின்பொழுது சிஷ்யர்கள் க்ரந்தத்தை படிக்க, பாபா விளக்கம் அளிப்பார். பல ஆபரணங்கள் அணிந்த 20-22 வயது மதிப்புள்ள ஒரு இளம் பணக்கார பெண், அவரது ப்ரவசனங்களுக்கு புதிதாக வரத் தொடங்கியிருந்தாள்.

மறுநாள் கதை நடுவில் ஏதோ ஒரு ப்ரஸங்கத்தில், பாபா, "பெண்ணே! நகையை விற்று ஸாது ஸேவை செய்! இந்த உடல் துக்கத்தின் இருப்பிடம். நாம பஜனை செய்; இல்லையேல் கழுதையாகத் தான் பிறப்பாய்!" என்று கூறினார். அந்த பெண்ணின் ஹ்ருதயத்தை இந்த சொற்கள் ஊடுருவின. அவள் வீடு திரும்பியதும் தனது கணவனான ஹம்ஸராஜரிடம், "நான் தினமும் கதை கேட்கும் அந்த மஹானிடம் தீக்ஷை பெற்றுக் கொள்ளபோகிறேன். என் நகைகளை விற்று ஸாது ஸேவை செய்யப்போகிறேன். அழியும் இந்த உடலை விரக்தியுடன் பஜனையில் ஈடுபடுத்தி, எனது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்ள போகிறேன். தாங்களும் இவ்வாறே செய்ய வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன்" என்றாள்.

ஹம்ஸராஜ்ஜீ கூறினார், "கோபால்தாஸ் பாபா நாம் குருவாக அடைய வேண்டிய மாபெரும் மஹான் என்பதில் சந்தேகமேயில்லை ! நாம் இருவருமே அவரிடமிருந்து தீக்ஷை பெறுவோம். ஆனால் அதை நாம் இல்லறத்தில் இருந்தபடியே செய்வோம். நீ மிகவும் சிறிய பெண். ஸந்யாஸம் பெற்று தனியாக நீ வாழ்வது என்பது உசிதமாகாது".

ஆனால் அவரது மனைவியோ இதை ஒப்புக் கொள்ளவில்லை. அவளது ஸங்கல்பம் த்ருடமாக இருந்தது. தினமும் அவள், தான் ஸந்யாஸம் ஏற்பதைப் பற்றியே தன் கணவனிடம் வற்புறுத்துவாள். பகவானிடமும் இதையே ப்ரார்த்திப்பாள், "ஹே ப்ரபோ ! நீ ஒன்று என்னை இந்த உலகிலிருந்து எடுத்துக் கொண்டு விடு, அல்லது என் கணவரின் மனதை மாற்றிவிடு".

ஹம்ஸராஜ்ஜீ தர்ம சங்கடத்தில் வீழ்ந்தார். அவரது பக்தி பாவங்களும் எந்த விதத்திலும் சளைத்தவை அல்ல. லக்னௌ அருகில் காகோரி எனும் இடத்தில் ஒரு காயஸ்த குடும்பத்தில் அவர் பிறந்தார். பிறவியிலேயே அவரிடம் பக்தியின் ஸம்ஸ் காரங்கள் பலமாக இருந்தன. ப்ருந்தாவனத்திலேயே வாஸம் செய்து, பஜனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அவர் இளம் வயதிலேயே, மனைவியுடன் ப்ருந்தாவனம் வந்திருந்தார். ஜீவனம் நடத்த லாலாபாபுவின் கோவிலில் வேலை பார்த்தார். தனது பஜனைக்கு இது மிகவும் அனுகூலமான சூழ்நிலை என்று அவர் எண்ணினார்.

ஒருநாள் கோவில் சார்பில் பணம் வசூலிக்க பர்ஸானாவிற் கும் நந்தகான்விற்கும் இடையிலுள்ள ஸங்கேத் எனும் க்ராமத்திற் கு சென்றார். அங்கு ஒரு கோனாரிடம் (மாடுகளைப் பராமரிப்பவர்) இருந்து பணம் வசூலிக்க வேண்டியிருந்த்து. அந்த கோனாரிடம் பணம் ஏதும் இல்லாததால், அவரிடமிருந்து எல்லா பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டது. அத்துடன் அவருடைய பெண்ணின் நகைகளையும் பறிமுதல் செய்தார் ஹம்ஸராஜ்ஜீ. அந்த வீட்டுப் பெண்கள், குழந்தைகள் எல்லோரும் அழத் தொடங்கி விட்டார்கள். அந்த கோனாரின் பெண் அழுதபடியே ஹம்ஸராஜ்ஜீ அருகில் வந்து மிகவும் தீனமாக, "அப்பா! நான் என் தந்தையை பார்ப்பதற்காக பிறந்தகம் வந்தேன். என் புகுந்த வீட்டிற்கு சென்று நான் எந்த முகத்தை காண்பிப்பேன்" என்று கேட்டாள்.

இந்த காட்சி ஹம்ஸராஜ்ஜீயை உலுக்கிவிட்டது. பிஹாரிஜீயின் க்ருபையால் அவருக்கு ஒரு ப்ரேரணை உண்டாயிற்று. அவரது மனம் ஸம்ஸாரத்திலிருந்து விலகியது.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா - 115*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

திருமால் பற்றிய ஐந்து பாடல்களை இதுவரை அறிந்தோம். இனி ஆறாவது பாடலை (பரிபாடல் நூலில் பதினைந்தாவது பாடலை) காண்போம். இந்த பாடலின் ஆசிரியர் இளம்பெருவழுதியார். வழுதி என்பது பாண்டிய வேந்தர்களுக்கான குடிப்பெயர். இதனால் இவர் பாண்டிய அரச குடும்பத்தை சேர்ந்தவர் என்பது விளங்கும்.

இளம்பிராயத்திலே பேரறிவு உடையவராக திகழ்ந்தமை பற்றி இவர் இளம்பெருவழுதி என குறிக்கப்பட்டவர் ஆதல் வேண்டும் என்பது தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்கள் கருத்து - இது இயற்பெயரும் ஆகலாம். இவர் பாடியதாக புறநானூறு என்னும் சங்க இலக்கிய எட்டுத்தொகை நூலில் ஒரு பாடல் உள்ளது. அப்பாடல் பொருள் செறிவிலும், சொல்லாற்றலிலும் சிறந்து விளங்குகிறது. சங்கநூல் பயிலும் அனைவரும் அப்பாடலை அறிந்திருப்பர் என்பதில் ஐயம் இலை. அப்பாடல் வருமாறு:

உண்டால் அம்ம, இவ் உலகம் - இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், ’இனிது’ எனத்
தமிஉயர் அண்டலும் இலரே; முனிவு இலர்
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி
புகழ் எனின், உயிரும் கொடுக்குவர்; பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகி
தமக்கு என முயலா நோன் தாள்
பிறர்க்கு என முயலுநர் உண்மை யானே (புறம் 182)

பொருண்மொழிக்காஞ்சி என்னும் துறையில் அமைந்த இப்பாடல் சான்றோர் இயல்பினை சித்தரிக்கின்றது.

தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனுக்குரிய தேவாமிர்தம்

தமக்கு வந்து கிடைத்தாலும் தாமே தனித்து அதனை உண்ண மாட்டார்கள். யாரோடும் வெறுப்பில்லாதவர்; பிறர் அஞ்சத்தகும் துன்பத்திற்கு தாமே அஞ்சி அதனை நீக்குதற்கு சோம்பல் இல்லாமல் இருப்பர். புகழுக்காக தம் உயிரையும் கொடுப்பர். பழி வருவதாயின் உலகமே கிடைப்பதாயினும் கொள்ள மாட்டார். மனக்கவலை இல்லார். எச்செயலையும் தமக்கு என்று செய்யாமல் பிறர் நலம் கருதியே செய்வார். இத்தகைய சான்றோர்கள் இருப்பதனால்தான் இந்த உலகம் இருந்து கொண்டுள்ளது என்பது இப்பாடலின் கருத்து. திருமால் அடியார்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும் இப்பாடல் கோடிட்டு காட்டுகிறது என்றும் சொல்லலாம். தன் அடியவர்களை காக்க, தன்னை சார்ந்தவர்களை தாங்க தன்னை தாழ்த்தி கொள்ள தயங்காதவன் அல்லவா பகவான். இப்படி பாடியதனால் ஐவர் வைணவ சமயத்தவர் என்று சொல்லலாம். திருமாலை பற்றி பாடியதும் இவரது சமயத்தை எடுத்து காட்டுகிறது என்பர் உ.வே.சா அவர்கள். இவர் பெயர் புறநானூற்றுள் "கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி" என்று காணப்பெறுகிறது. "கடலுள் மாய்ந்த" எனும் அடை இவர் மறைந்த பிறகு ஏற்பட்டதாகலாம்.

இவரது உயர்ந்த சிந்தனை வளத்தை பரிபாடல் 15ஆம் பாடல் மேலும் விளக்குகிறது.

இப்பாடலுக்கு கடவுள் வாழ்த்து என்று தலைப்பு அமைந்துள்ளது. இப்பாடலின் பண் - நோ்திறம் - இப்பாடலுக்கு இசை வகுத்தவர் மருத்துவன் நல்லச்சுதனார் என்பவர்.

திருமாலின் ஐம்பெருநிலைகள் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்பனவாகும். பரத்துவ நிலை நாம் பேறு பெறுகின்றபோது அறியப்பெறும் நிலை - அனுபவிப்பதே அன்றி நம்மால் உணர ஒண்ணாது. வியூகம் பகவான் காரியம் கொள்ளும் நிலை. அது, தேவர்களும், முமூக்ஷு- -க்களும் பகவானை சேவிக்கும் இடம். விபவம் என்பது அவதார நிலை. அது அந்தந்த அவதார காலத்தில் வாழ்ந்தவர்களுக்கே அறிய வல்லது. பின்னுள்ளோர் அவதார நிகழ்ச்சிகளை சொல்லி தோத்திரம் செய்து பயன் கொள்ளலாம் அன்றி வேறில்லை. எல்லாவற்றிற்கும் உள்ளுறை பொருளாக நின்று இயக்கும் அந்தர்யாமித்வம் ஒருவராலும் உணர ஒண்ணாது. (தொடரும்)

# அப்பாலுக்கு அப்பால்



## பசவேஸ்வரர் - 12

சாளுக்ய அரசின் மறைந்த மந்திரிகளில் ஒருவரின் பெண். நீலாம்பிகை. அவள் சாளுக்ய ராஜா பிஜ்ஜாலனின் குடும்பத்து வளர்ப்பு பெண்ணாகி இருந்தாள்; அதனால் பிஜ்ஜாலனின் சகோதரி. அவனிடம் மந்திரியாய் இருந்த பலதேவராசரின் மகள்தான் கங்காம்பிகை. கங்காம்பிகையும் நீலாம்பிகையும் நெருங்கிய தோழிகள். பரவை, சங்கிலி என்ற இருவரை சுந்தரர் மணந்ததுபோலவே, பசவரும் நெருங்கிய தோழிகளான இவ்விருவரையும் மணக்க நேர்ந்தது. இதையும் கூட, ஈசான்யர் பசவரிடம் "இரு வேறு பூக்களில் ஒரே மணம் வீசக் கூடும்" என்று முன்னரே சொல்லித்தான் இருந்தார்.

தலைநகர் மங்களவேதா வந்த பசவரை பார்த்த பிஜ்ஜால மன்னனுக்கும் அவரை மிகவும் பிடித்துப் போய் விட்டது. திருமணத்திற்கு பின், கூடலசங்கமத்திற்கு பசவர் கிளம்புகையில், பிஜ்ஜாலன் அவரை கூப்பிட்டு "பசவண்ணரே! என் சகோதரியை மணந்த நீர் இப்பொழுது எனக்கு சொந்தமும் ஆகி விட்டீர்கள். ராஜ்ய நிர்வாகத்திற்கு உங்கள் சகாயம் நிச்சயம் தேவை" என்று வேண்டிக் கொண்டான். அறிஞர்களிடம் அக்காலத்து ராஜாக்கள் அப்படி மரியாதையாக இருந்தனர். பசவரை திருமணம் என்பது சற்றேனும் பந்தப்படுத்தவில்லை. பிஜ்ஜாலன் சொல்லையும் அவர் மறுத்தோ, எதிர்த்தோ பேசவில்லை.

ராஜதானிக்கு பசவர் கிளம்பி சென்றபொழுது, ஈசான்யர் மனதால் "நான் வளர்த்த பொக்கிஷம் என்னை விட்டு செல்கிறதே" என்று அழுதார். ஆனாலும் அவருக்கு ஒரு ஆறுதல். தான் செய்வது ஒரு தியாகம் என்று அவருக்கு தெரியும். அவர் நினைத்தால், பசவரை தன்னுடனேயே வைத்துக்கொள்ள முடியும். தனது பல்கலைக்கழகத்தை நிர்வாகம் செய்ய சொல்லி இருக்க முடியும். ஆனால் அது ஒரு சுயநலமாக ஆகி இருக்கும். பசவர் அவதாரம் நிறைவேற, பசவரை உலகிற்கு அர்ப்பணிப்பது

அவசியம். இதை நன்கு அறிந்த அந்த முனிவர் தளர்ச்சியும், மகிழ்ச்சியும் ஒருங்கே அடைந்தார். பசவர் இல்லாததால் அவர் மனம் மேலும் அகமுகமாகி, புற விஷயங்களில் கவனம் குறைத்து, சதா பூஜை, மௌனம், தியானம் என்று இருந்தார்.

திருமணம் முடிந்த சில நாட்களில் குருவை காண பசவர் கூடலசங்கமம் வந்தபொழுது, ஈசான்யர் எல்லோரையும் அழைத்து அவரவர்கள் செய்ய வேண்டிய கடமைகளைப் பட்டியலிட்டார். பசவரிடம், "உனக்கு ஒன்றும் ஆணை பிறப்பிக்கவில்லை என வருந்தாதே பசவண்ணா! நீ எங்கு இருக்க வேண்டும் என்பதை இறைவனே தீர்மானிப்பான். அவன் எப்படி வைத்தாலும், அதில் உன்னை ஈடுபடுத்திக் கொள். உனக்கு என் பூரண ஆசிகள் எப்பொழுதும் உண்டு" என்று சொல்லி விட்டு யோகத்தில் அமர்ந்து, எல்லோரும் பார்க்க பார்க்க, தன் சரீரத்தை விட்டார். குருவைப் போலவே எதற்கும் கலங்காத பசவர், குருவின் பிரிவை தாங்க முடியாமல் அழுதார்.

(தொடரும்)


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)

Consultant in Endocrinology, Diabetes & Metabolism

Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New No. 228, old No. 169, R.K.Mutt Road,

Mandaveli, Chennai - 600 028

(Next to Ravi Pharmacy)

ADVT Ph - 044 - 24950090, Mob - 9840488777

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .

உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / **D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


| ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள் | |
|---|---|
| ஏகாதசி | பிப்ரவரி 6, 21 மார்ச் 8, 23 |
| ஜனவரி 27 | விருதுநகர் நாமத்வார் திறப்பு |
| ஜன 28 - 30 | சிவகாசி , தூத்துக்குடி , மதுரை |
| பிப்ரவரி 4 | ஸ்டார் விஜய் டிவி. பக்தி திருவிழா நாரதகான சபா |
| பிப்ரவரி 14 | வசந்த பஞ்சமி - கல்யாணஸ்ரீனிவாசபெருமாள் பிரதிஷ்டா தினம் |
| பிப்ரவரி 17 | மோகனூர் |
| மார்ச் 10 | மஹாசிவராத்திரி - கன்யாகுமரி ஜய ஹனுமான் பிரதிஷ்டா தினம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.